# செம்மண்

நிலம் 3 துகள் 148 வள்ளுவர் ஆண்டு 2052, 20 - 26 வைகாசி 2023 வாரமலர் பக்கங்கள் 16




"தன்னிச்சையாகத் தனக்கென்று கொள்கை, கோட்பாட்டையோ, சிந்தாந் தத்தையோ, செயற்பாடுகளையோ கொண்டிராமல் குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிராக எதையாவது செய்துவிட வேண்டும் என்பதாக அருண்சித்தார்த்தின் செயற்பாடுகள் அரங்கேறிக்கொண்டிருக் கின்றன"

# தமிழ்ப் பௌத்தத்தின் புத்துயிர்ப்பு...!

நாகராசா

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் டாக்டர் அம்பேத்காரை முன்னிலைப்படுத்தித் தமிழ்ப் பௌத்த மீள் எழுச்சிச் செயற்பாடுகள் சில கடந்த வாரம் இடம் பெற்றன. தமிழ்நாட்டில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவனும் யாழ்ப்பாணத்தில் அருண் சித்தார்த்தும் இந்த விடயத்தில் களமிறங்கியிருந்தனர்.

டாக்டர் அம்பேத்கார் இந்திய அரசமைப்பை உருவாக்கியவர். இந்து மதத்தி லிருந்து பௌத்தத்துக்கு மாறியவர். அவர் அவ்வாறு மாறிய அன்றே இந்தியாவில் பத்து லட்சம் மக்கள் சேர்ந்து பௌத்த மதத்துக்கு மாறினர். இந்த நிலையில் தற்போது திரு மாவளவனுக்கும் அருண்சித்தார்த்துக்கும் தமிழ்ப் பௌத் தத்தைக் கையிலெடுக்கும் தேவை ஏன் ஏற் பட்டது...?

புரட்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தனது கவிதை ஒன்றில் 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன பிழை' என்று எழுதியிருப்பார். அதைப் போல முன்பு பௌத்தர்களாக இருந்த தமிழர்கள் மீண்டும் பௌத்தர்களாகினால் என்ன என்ற கேள்வியுடன் அருண் சித்தார்த் களமிறங்கியுள்ளார். திருமாவளவனும் அருண்சித்தார்த்தும் தாழ்த்தப்பட்ட சாதியினரை முன்னுக்குக் கொண்டுவரும் மார்க்கமாக இதைக் கையாள்வதுபோல தெரிகிறது. ஆனால், அருண்சித்தார்த்தின் செயற்பாடுகள் அவரது தன்னிச்சையான சித்தாந்தமாகவோ, பற்றுறுதியான கொள்கையாகவோ ஒருபோதும் வெளிப்பட்டிருக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சி

யினருக்கு எதிராகவும், இந்து, சைவத் தரப்பினருக்கு எதிராகவும், ஈழப் போராட்டத்துக்கு எதிராகவும் ஏதாவது செய்துவிடவேண்டும் என்கிற நிகழ்ச்சி நிரலிலேயே அவர் இயங்கி வருகிறார். இனப்படுகொலை, இறுதிப்போர்க்குற்றம் குறித்து அரசபடைகளைப் பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியத் தரப்பினர் போராடியபோது இறுதிப்போரில் புலிகள் இழைத்த குற்றங்கள் குறித்தும் ஆராயவேண்டும் என்று நல்லூரில் ஒரு சிலரை



ஒன்றுகூடிக் குரல் கொடுத்தார். தற்போது தையிட்டி விகாரை விடயத்தில் தமிழ்த் தரப்பினர் எதிர்ப்புக் குரல் கொடுத்தபின்னர் அங்கு குறிப்பிட்ட தொகை மக்களை அழைத்துச் சென்று வழிபட்டிருக்கிறார். இவ்வாறாகத் தன்னிச்சையாகத் தனக்கென்று கொள்கை, கோட்பாட்டையோ, சிந்தாந்தத்தையோ, செயற்பாடுகளையோ கொண்டிராமல் குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிராக எதையாவது செய்துவிட வேண்டும் என்பதாக அருண்சித்தார்த்தின் செயற்பாடுகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. அதனால் இவரது செயற்பாடுகள் தமிழ் அரசுக் கட்சி, ஈழப் போராட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள், விமர்சிப்பவர்களைத் தாண்டிப் பெருமளவான தமிழ் மக்களிடம் இதனால்தான் பெரிதாக எடுபட வில்லை.

**பௌத்தக் கோட்பாடு**

கத்தோலிக்கத்திலிருந்து புரொட்டஸ்தாந்து என்ற மதம் தோன்றியது போலத்தான் இந்து மதத்திலிருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் புதிய வாழ்க்கை முறையை உருவாக்கியவர் புத்தர். அவரது சித்தாந்தத்தில் முக்கியமாக இரண்டு விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. உயிர்ப்பலி, சாதியத்தை ஒழித்தல் ஆகியன அவை. அவரால் உருவாக்கப்பட்ட பௌத்தம் என்பது மதமல்ல. வாழ்க்கைக்கான கோட்பாடு மாத்திரமே. புத்தர் செல்வச் செழிப்பான மன்னர் குலத்தில் பிறந்தபோதிலும் அவற்றைக் கைவிட்டு வாழ்க்கையின் யதார்த்தத்தை முன்னுணர்ந்த ஞானியானார். ஒளிவட்டம், ஔரா எனப்படுகிற ஞானம், 18 மைல் சுற்றுவட்டாரத்தில் நடப்பவற்றை உணரும் ஆற்றல் ஆகியன கௌதம புத்தருக்கு இருந்தது என்று கூறப்படுகிறது. அவர் உருவாக்கிய பௌத்தம் எனும் கோட்பாடு பின்னர் மதமாகி அதுவே மதவெறியாகிப் பௌத்த சிங்களத் தரப்பினரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உயிர்ப்பலி என்பதைப் புத்தர் எதிர்த்திருக்க அதைச் சாதாரணமாக்கிப் பல உயிர்களைக் காவு கொள்ளும் நிலையில் இன்றைய இலங்கையின் சிங்கள பௌத்தம் மாறியிருக்கிறது. புத்தர் உருவாக்கிய பௌத்தம் என்பதற்கப்பால் தற்போதிருப்பது பௌத்த மத வெறி என்பதே பொருத் தமானது. பௌத்த பிக்குவே அரச தலைவரைச் சுட்டுக்கொல்லுமளவுக் குப் புத்தரின் பௌத்தம் இங்கு திசை மாறிவிட்டது என்பதுதான் உண்மை.

**பாத வணக்கம்**

கௌதம புத்தர் தனது கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக மக்களை நோக்கிப் பல்வேறு தூர தேசங்களுக்குக் கால் நடையாகச் சென்றார். இதனால்தான் பௌத்தத்தில் பாத வணக்கம் என்பது முக்கியம் பெற்றது. சிவனொளிபாத மலை என்று சைவர்கள் குறிப்பிடும் மலையில் உள்ள பாதத்தைப் பௌத்தர்கள் சிறிபாத என்றே அழைக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பௌத்தம் நிலவிய காலத்தில் இந்தப் பாத வணக்கமும் நடைமுறையிலிருந்தது. பல்லவர்கால பக்தி இயக்கத்தின் எழுச்சியால் தமிழ் நாட்டிலிருந்து பௌத்தர்கள் விரட்டியடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் கந்தரோடைப் பகுதியில் தமிழ்ப்பௌத்த துறவிகளும் அவர்கள் சார் குடும்பத்தினரும் குடியேறினார்கள். சில காலம் தமிழ்ப் பௌத்தம் வடபகுதியில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. கந்தரோடை பௌத்த எச்சங்களும் பாத வணக்கமும் இதற்குச் சான்றாகும். இந்தப் பாத வணக்க விகாரைகள் பின்னர் பூதவராயர் கோவில்களாகப் பெயர் மாற்றப்பட்டுப் புதத்தரின் பாதங்கள் சிவனின் பாதங்களாக அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கு முன்னர் இந்தியாவிலோ இலங்கையிலோ பாத வணக்கம் செய்யப் படவில்லை. இந்தியாவிலும் பல பௌத்த பள்ளிகளும் புத்த கோவில்களும் இந்துக் கோவில்களாக மாற்றப்பட்டன. இந்துமதத்திலிருந்து பிறந்த பௌத்தம் மறுபடியும் இந்து மதத்துக்குள் உள்வாங்கப்பட்டதும் கவிஞர் காசி ஆனந்தனின்





வரிகளுடன் ஒத்துப்போகவே செய்கிறது.

**தமிழ்ப் பௌத்த எச்சம்**
யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் சவக் கிரியைகள் தொடங்கப்பட்டது தமிழ்ப் பௌத்த பிக்குகளாலேயே. சூத்திரர்களின் சாவில் பிராமணர்கள் கலந்து கொள்வதில்லை. அதில் கலந்துகொண்டால் தமக்குத் துடக்கு ஏற்பட்டுவிடும் என்பதும் பின்னர் கோவில்களில் பூசைகள் செய்யமுடியாது என்பதும் அவர்களது விளக்கமாக இருந்தது. தற்போது சவக்கிரியைகளைச் செய்பவர்கள் தமிழ்ப் பௌத்த பிக்குகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. அந்தச் சடங்குகளைத் தமது வாழ்வாதாரமாக முன்னெடுத்து வருகின்றனர். அவர்களின் குடும்பங்கள் தற்போது செறிந்து வாழும் ஊர்கள் முன்பு தமிழ்ப் பௌத்தம் நிலவிய ஊர்களே. அதேவேளை தற்போது புதுவராயர் கோவில்கள் என்று கூறப்படுகிற பாத வணக்கம் செய்த கோவில்களும் முன்னைய பௌத்த கோவில்களே. இவ்விரு வாழ்வியல் அடையாளங்களும் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பௌத்தம் நிலவியதற்கான எச்சங்களே.

**தையிட்டி புத்த விகாரை**
தையிட்டியில் 100அடி உயரமான புத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கான கலசம் பொருத்தப்பட்டு எதிர்வரும் பௌர்ணமி தினமான பொசொன் நாளில் அந்த விகாரை திறக்கப்படவிருக்கிறது. தாதுகோப வேலைகள் முடிவடைந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அது அகற்றப்படவேண்டும் என்று போராட்டத்தை ஆரம்பித்தார். அதற்குத் தமிழ் மக்களின் எதிர்வினையானது " உவர் இவளவு நாளும் எங்கு போனவர், தாதுகோபுரம் கட்டி முடிக்கப்படும் வரை கோமாவில் இருந்தார?" என்பதாக இருந்தது.

**அருண்சித்தார்த்தின் செயல்**
கஜேந்திரகுமாரின் போராட்டத்தின் பின்னர் அருண் சித்தார்த் தலைமையில் சிலர் சேர்ந்து தையிட்டி விகாரைக்குச் சென்று அங்கிருந்த பிக்குவிடம் ஆசி பெற்றனர். இந்த விடயம் இனிமேலும் தொடரத்தான் போகிறது. இந்து மதத்தவர்களும் தமிழத் தேசியக் கட்சிகளும் அதை இலகுவில் தடுத்துவிட முடியாது. இதுபற்றி சமூக வலைத்தளங்களிலும் அதிக கருத்துகள் பரவி வருகின்றன.

அருண்சித்தார்த்தின் இந்த எதிராகச் செயற்படும் அணுகுமுறையும் அதற்கிருக்கிற அரச ஆதரவும் பௌத்த மத எழுச்சியும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவருவதாகக் கூறப்படும் கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக இருக்கத்தான் போகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் தமிழ் உயர் சாதியினர் அதிகம் கத்தோலிக்க மதத்துக்கு மாறினார்கள். ஒல்லாந்தர் காலத்தி;ல் புரொட்டஸ் தாந்துக்கு மாறினார்கள். பிரித்தானியர் காலத்தில் இரு மதப் பிரிவுகளையும் பின்பற்றிக் கல்வி, தொழில் சமூக மதிப்பு எனப் பெற்றார்கள். தற்போதைய சூழலில் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கப்பட்ட மக்கள் தமது சாதிப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத இந்து மதத்தையும் தமிழ்த் தேசிய அரசியலையும் விட்டு விலகி அருண்சித்தார்த்துருக்குப் பின்னால் செல்வது சாத்தியமே. அவ்வாறானால், இனிவரும் நாள்களில் தமிழ்ப் பௌத்தம் மெல்ல மெல்லத் தலை தூக்கும். அவ்வாறு மதம் மாறும் தமிழருக்குக் கல்வி வேலை வாய்ப்பு பொருளாதார வாய்ப்புகள் எனப் பலவற்றை இலங்கை அரசு திட்;டமிட்டு வழங்கும். அவர்கள் பலமடைந்த பின் வடக்கில் விகாரைகள் கட்டப்படவேண்டும் எனப் போராடுவார்கள்.

தமிழரின் இருப்பையும் இதுவரை இருந்து வந்த அரசியலையும் தமிழரை வைத்து மேலும் சிக்கலானமாக மாற்றுவது என்பதிலேயே சிங்கள ஆட்சியாளர்கள் முனைந்து வருகிறார்கள். அதற்கு அருண்சித்தார்தின் முன்னெடுப்பு எதிர்காலத்தில் காத்திரமாக அமைய வாய்ப்புண்டு.



# பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய பெரிய பொறுப்பு

விதுரன்




பல்கலைக்கழக மாணவர்கள் ஆகக்கூடியது 4 வருட காலம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கிறார்கள். தாம் கல்வி கற்கிற காலப்பதியில் தமது மக்கள் சார்ந்த செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபடத் தவறுவதில்லை. சில மாணவர்கள் எவ்வித பிரச்சினைகளும் இன்றித் தமது கல்வியை முடித்துவிடுகின்றனர். ஒரு சிலர் படை நடவடிக்கைகள், பஞ்சம், இயற்கை இடர்கள், கொவிட் போன்ற தொற்றுகள், கலவரங்கள் எனப் பலவற்றைச் சந்தித்துக் காலம் தாழ்த்திக் கல்வியை முடிக்கின்றனர். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது ஈழப் போராட்ட வரலாற்றை – போக்கைத் தீர்மானித்ததில் முக்கியம் பெறுகிறது. ஆனாலும் போர் முடிந்த முதல் நான்கு ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தில் கற்றவர்கள் மிகப் பெரிய வரலாற்றுத் தவறை இழைத்திருக்கிறார்கள். இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களின் பெயர் விவரத்தை முழுமையாகத் தயாரிக்காததே அவர்கள் இழைத்த பெருந் தவறு.

**அரசியல்வாதிகளிடம் இதை எதிர்பார்க்க முடியாது**

உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்ததற்காக மகிந்தவுக்கு நாடாளுமன்றில் வைத்து நன்றி கூறியவர்கள் தமிழ் அரசியல்வாதிகள். இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களின் தொகை 1லட்சத்து 40 ஆயிரம் என்கிறார்களே தவிர அந்த மக்களின் பெயர் விவரத்தைத் திரட்டி ஐ.நாவிடம் சமர்ப்பித்து இலங்கைப் படையினர் சட்டத்தை மீறினர் என்றோ மனித உரிமை மீறப்பட்டது என்றோ போர்க்குற்றங்களை நிகழ்த்தினர் என்றோ போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போது உறுதிப்படுத்த முன்வரவில்லை. அவ்வாறு செய்தால் அப்போதும் அதன் பின்னரும் ஆட்சியிலிருந்த ராஜபக்சாக்களைப் பகைத்ததாக ஆகிவிடும் என்பதில் கவனமாக இருந்தார்கள். இறந்தவர்கள் திரும்பி வரவா போகிறார்கள் நாங்கள் மீண்டும் அரசியலுக்குவரச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது அதுவே போதும் என்ற நிலைப் பாட்டிலேயே இப்போதும்கூட இயங்கி வருகிறார்கள்.

**அனந்தியின் குற்றச்சாட்டு**

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசி தரன் ஒரு சந்தர்ப்பத்தில் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் வெளி அரங்கிற்குச் சென்று நிலமைகளை அவதானித்திருந்தார். அதன் பின் அவர் சில கருத்துக்களை வெளியிட்டார். நாங்கள் எதைச் சொன்னாலும் ஐ.நா சபையில் ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை, இலங்கை அரசு கூறும் தரவுகளையே அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் - என்றார். அவர் குறிப்பிட்டது முற் றிலும் உண்மையான செய்திதான். பெரும் படிப்புப்

படித்த சட்டத்தரணிகளும் நீதிபதிகளும் ஐ.நாவின் வெளி அரங்குக்குச் சென்று வந்தாலும் தமது கள்ளத்தனத்தை வைத்து இந்த உண்மையை மக்களிடமிருந்து மறைத்து வருகின்றனர். ஆனால் அனந்தி அதைப் பொதுவெளியில் போட்டுடைத்தார்.

**மாறுபட்ட தரவுகள்**

இறுதிப்போரில் இறந்தவர்களின் தொகை 13ஆயிரத்து 500 அளவில்தான் உண்டு என்று அரச தரப்பில் சொல்லப்படுகிறது. பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம், யு.என்.எச்.சி.ஆர் பதிவுகளிலும் இந்தத் தொகைதான் உள்ளது. இதைத் தாண்டி ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று பேச்சளவில் சொல்வதுடன் முடிந்துவிட்டது தமிழ்த் தரப்பின் பணி. அப்படியாயின் அந்த விவரங்களை உள்ளடக்கிய பட்டியலை யார் தயாரிப்பது? இறுதிப் போரில் இறந்த மக்கள் என்று அரச தரப்புக் குறிப்பிடும் தொகையும் புலிகள் அணியில் இருந்து சரணடைந்த பேராளிகள் என்று குறிப்பிடும் அரச தரப்பின் தொகையும் தரவு ரீதியாகக் கிட்டத்தட்ட சமமாக உள்ளது. ஆயுதப் பயிற்சி பெற்ற 13ஆயிரத்து 600 போராளிகளை ஐ.நா நிதியுடதவியுடன் மறுவாழ்வளித்து அவர்களின் குடும்பத்தினருடன் இணைத்தது என்பது புள்ளிவிவர ரீதியில் நிரூபிக்கப்பட்ட ஒன்று. அந்த விடயத்தில் மனித உரிமை அமைப்புகளும் ஐ.நாவும் உலகின் முன்னனி நாடுகளும் இலங்கை அரசைப் பாராட்டியுள்ளன. ஆனால், உண்மையில் இறந்தவர்களின் பெயர் விவரத்தை தயாரிக்கத் தமிழ்த் தரப்பினர் முன்வரவில்லை. அதற்குரிய வல்லமை பல்கலைக்கழக மாணவர்களுக்கே உண்டு.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், முள்ளிவாய்க்கால் கஞ்சி ஆகிய விடயங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அவற்றை மக்கள் சார்பாகச் செய்து முடிப்பதற்குத் தமக்கே உரித்துண்டு என வாதிடும் அரசியல் கட்சிகளுடனும் தலைவர்களுடனும் முட்டிமோதி அவற்றைப் பல்வேறு ஒவ்வாமைகளுடன் நிறைவேற்றவேண்டியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இறுதிப்போரில் இறந்துபோனவர்களின் பட்டியலைத் தயாரித்து முழுமைப்படுத்தவேண்டிய பொறுப்பு தற்போதுள்ள மாணவர்களுக்கேயுண்டு.

இதுவிடயத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கு ஆகிய பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்கள் சேர்ந்து பணியாற்றினால் அடுத்த வருட நினைவேந்தலுக்கு முன்னர் முழுமையான பட்டியலைத் தயாரித்துவிட

**ஆயுதப் பயிற்சி பெற்ற 13ஆயிரத்து 600 போராளிகளை ஐ.நா நிதியுடதவியுடன் மறுவாழ்வளித்து அவர்களின் குடும்பத்தினருடன் இணைத்தது என்பது புள்ளிவிவர ரீதியில் நிரூபிக்கப்பட்ட ஒன்று**

முடியும். பல்கலைக்கழக மாணவர்களின் கைகளில் இருக்கும் கைபேசிகள், மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தியும் இந்தப் பணியை நிறைவேற்றிவிட முடியும். இந்த விவரங்களைப் பொதுவான இணையத்தளத்தில் பதிவேற்றினால் இறுதிப்போரில் தமது உறவுகளை இழந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருப்போர் தமக்குத் தெரிந்த விவரங்களைப் பதிவேற்றுவர். பெயர், முகவரி, சம்பவம் ஆகியனவற்றில் ஏதாவது தவறாகத் தரவேற்றப்பட்டிருந்தால் அல்லது தரவேற்றம் செய்யத் தவறியிருந்தால் அவற்றைச் சீர் செய்யும், திருத்தும், நீக்கும் வழிகளையும் ஏற்படுத்திச் செயற்படுத்தலாம்.

இத்தகு பெறுமதி மிக்க ஆவணத்தை அரசியல் தலையீடுகள் இன்றியும் பக்கச்சார்பின்றியும் தயாரிக்கக்கூடிய வாய்ப்பும் மனித வளமும் தொழில்நுட்ப அறிவும் பல்கலைக்கழக மாணவர்களிடமே உண்டு. இனி வருகிற நாள்கள் அதற்கான வேலைத்திட்டத்தை நிறைவேற்றும் நாள்களாகவே இருக்கவேண்டும். அதை வடக்குக் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து செய்வார்களா...?






தர்மராசா

# சிறைக்குள்...

## சிறை நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் சிங்களச் சண்டியர்கள்

கொழும்பு, சி.ஆர்.பி, மகசீன் ஆகிய சிறைச்சாலைகளில் சிங்களக் கைதிகளுடன் ஒன்றாகச் சேர்த்துத் தான் தமிழ் அரசியல் கைதிகளையும் சிறை அறைகளுக்குள் அடைப்பார்கள். இதனால் தமிழ்க் கைதிகள் காம்பறாப் பாட்டிக்காரர் ஊடாகப் பணம் கொடுத்துத் தனியான சிறை அறையைப் பெற்று அதில் சேந்திருப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இது காம்பறாப் பாட்டிக்காரருக்கு வருமானத்தைக் கொடுக்கிற பெரும் விடயமாக இருந்தது. கட்டடம் கட்டாமலேயே வாடகை அறவிடும் வாய்ப்பை இந்த விடயம் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. சிறைச்சாலை அறைகளைக் காட்டி, "நீ அங்கை இரு நீ இஞ்சை இரு" என்று சண்டித்தனம் செய்து பணம் உழைக்கக் காலப்போக்கில் அவர்கள் கற்றுக்கொண்டார்கள். அதைவிட பணத்துக்காகத் தந்திர உத்திகளையும் கையாண்டார்கள்.

குறித்த சிறைகளில் அடைக்கப்படும் கைதிகளுக்கான லொக்கேசன் இந்த வார்ட் என்று குறிப்பிடப்படுமே தவிர இந்த அறை என்று போடப்படுவதில்லை. காரணம் அங்கு கைதிகளின் தொகை அதிகமாக இருப்பதே. எனவே மிகுதி நிர்வாகத்தைக் காம்பறாப் பாட்டிக்காரரே கவனிக்கின்றனர். கைதி ஒருவர் காம்பறாப் பட்டிக்காரரிடம் பணம் கொடுத்துச் சிறை அறை ஒன்றை வாங்கிய பின்னர் குறிப்பிட்ட கைதியை லொக்கேசன் மாற்றினாலோ, வேறு வாட்டுக்கு அல்லது வேறு சிறைக்கு மாற்றினாலோ அந்தச் சிறை அறையையும் பணத்தையும் அந்தக் கைதி இழந்துவிடுவார். இந்த நடைமுறையிருப்பதால் காம்பறாப் பாட்டிக்காரரே சிறை ஊழியர்களைப் பிடித்துத் தமக்குப் பணம் வழங்கிச் சிறையில் அறை பெற்றுக் கொண்ட கைதிகளின் லொக்கேசனைத் தமக்குத் தேவையான நேரத்தில் (புதிய கைதிகள் அறைகேட்டு வரும்போது) மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் வெளியேறிய அறையைப் புதிதாக வருவோருக்கு வழங்கிப் பணம் வாங்குவார்கள்.

ஜெனீவாவுக்கு அனுப்புவதற்கான விண்ணப்பப்படிவம் ஒன்று ராமகிருஷ்ணா மிஷன்



# "புலிகள் அமைப்பு சாதாரண பயங்கரவாத அமைப்பு அல்ல"

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

கண்டியில் வசித்து வரும் கொமாண்டர் சாலிய சந்தநாயக்க கொழும்புப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1987ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கைக் கடற்படையில் சேர்ந்தார். தனது நாட்டுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் பாடசாலையில் படிக்கும்பேதே தனக்கு ஏற்பட்டுவிட்டது என்கிறார் அவர். அதனால் கடற்படையில் சேர்ந்து கடல்மார்க்கமாகப் புலிகள் ஆயுதங்களைக் கடத்துவதைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டேன் என்கிறார். புலிகளின் பெரிய ஆயுதக் கப்பல்களைப் பன்னாட்டுக் கடற்பரப்பில் வைத்துத் தாக்கி மூழ்கடித்த சாஹர கடற்படைக் கப்பலில் இரண்டாவது கட்டளையிடும் அதிகாரியாகக் கடமையாற்றினேன் என்கிறார்.

நளின் ராஜபக்ச என்கிற யூரியூப் தளத்தில் "நளினுடன் நேரடி" என்ற நிகழ்ச்சியில் பங்கெடுத்து அவர் கூறியவை வருமாறு.

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு இலங்கை வான் படையில் சேர்வதற்கு விண்ணப்பித்தேன். அப்போது எனக்கு 21வயது பூர்த்தியாகியிருக்கவில்லை என்பதால் அதில் சேர முடியவில்லை. 21வயதை அடைந்ததும் கடற்படையில் சேர்வதற்கு விண்ணப்பித்து அதில் சேர்ந்தேன். 1987இல் கடற்படையில் சேர்ந்த நான் 1989 நவம்பரில் அதிகாரி தரத்தில் பயிற்சியை முடித்து வெளியேறினேன். எமது அணியில் 23பேர் இருந்தார்கள். அட்மிரல் பிரசன்ன ஹேவகே, தேவேந்திர, தனபால ஆகியோரும் எனது அணியில் இருந்தார்கள்.

**நான்காம் கட்ட ஈழப்போர்**

நான்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது இலங்கைச்

மூலம் பல கைதிகளுக்குக் கிடைத்தது. அதில் 5 பக்கங்கள் இருந்தன. அவற்றைச் சிறை ஊழியர்கள் ஊடாக வெளியே அனுப்பிப் போட்டோப் பிரதி செய்து அந்தப் படிவம் ஒன்றை நூறு ரூபாவுக்கு விற்கும் நிலை சிறைக்குள் இருந்தது. அது இலவசமாகப் பெறக்கூடியது. இந்த வியாபாரத்தால் பண வசதியில்லாத கைதிகள் மிகவும் சங்கடப்பட்டார்கள். அதைப் பூர்த்தி செய்து அனுப்பினால் வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புவார்கள் என்பது கைதிகளின் எதிர்பார்ப்பு. ஆனால், அதன் உண்மையான நோக்கம் ஐக்கிய நாடுகள் அமையத்தில் பதிவு செய்வதுதான். விடுதலையானபின் சிலவேளை வெளிநாட்டுக்குப் போகும் வாய்ப்பு ஏற்பட்டால் தான் சிறையில் வாடியதை உறுதிப்படுத்த உதவும் என்றும் நம்பினார்கள். ஆனால் படிவத்தை விற்றவனின் நோக்கமோ பணம் உழைப்பது மாத்திரம்தான்.

பிரித்தானியாவில் இயங்கிவருகிற மனித உரிமை அமைப்பு ஒன்று இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி அரசியல் கைதிகளாகச் சிறைகளில் வாடுவோருக்கு நிதி வழங்குகிறது என்று சிறைக்குள் ஒரு கதை உலாவியது. அதற்காகக் கைதிகள் பலரும் வெளிநாட்டுக் கடித உறை வாங்கி (2002இல் அதன் பெறுமதி 16ரூபா 50 சதமாக இருந்தது) சாந்தவடிவேல் என்பவருக்கு முகவரியிட்டுக் கடிதம் அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்பிய ஒரு சிலருக்கு அங்கிருந்து 10 ஆயிரம் ரூபா கிடைத்தது என்று அறிந்தேன்.

கைதிகள் தமது பிரச்சினைகளையும் குடும்பச் சூழல் பற்றிய விடயங்களையும் கடிதத்தில் எழுதி அனுப்பும்போது அவற்றை பிரிட்டனிலுள்ள சைவக் கோவில் ஒன்றின் விளம்பரப் பலகையில் ஒட்டுகிறார்கள் என்றும் அந்தக் கோவிலுக்குச் செல்வோர் அவற்றைப் பொழுதுபோக்காக வாசித்து அதில் அவர்களின் மனதைப் பாதித்த கடிதங்களுக்குப் பணம் கொடுக்கின்றனர் என்றும் அவர்கள் வழங்கும் தொகையில் அரைவாசியைக் கோவில் தெவைக்கு எடுத்துக்கொண்டு மிகுதியைக் கைதிகளுக்கு அனுப்புகின்றனர் என்றும் ஒரு கைதி கூறினார். இந்தச் செய்தி உண்மையாக இருந்தால் கைதிகளாக இருப்பவர்கள் பாவிகளே. கைதிகளின் துன்பத்தை மூலதனமாக வைத்து நடக்கும் வெளிநாட்டு வியாபாரம் இது. சாந்தவடிவேலுக்கு விலாசமிட்டு நானும் ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன். அதற்குப் பதிலோ பணமோ கிடைக்கவில்லை. நான் எழுதிய கடிதத்தில் பிரித்தானியத் தமிழரைக் கவரக்கூடிய துயர வசனங்கள் போதாமலிருந்திருக்கக் கூடும்.

(தொடரும்)

கடற்படையின் செயற்பாடு மிக அவசியமானதாக இருந்தது. அப்போது நான் ஜெய சாஹர கப்பலில் இணைந்தேன். அந்தக் கப்பலில் 8 மாதங்கள் கடமை புரிந்தேன். அப்போதெல்லாம் ஓய்வின்றி வேலை செய்ய வேண்டியிருந்தது. ஒரு தடவை மலேசியாவில் நடந்த கடற்படை நிகழ்வு ஒன்றில் ஜெயசாஹர கப்பலில் சென்று கலந்து கொண்டேன்.



**காரைநகர் கடற்படைத்தளம்**

நான் காரைநகர் கடற்படைத் தளத்துக்கு மாற்றலாகிச் சென்றபோது பி-243 கப்பலுக்குக் கட்டளையிடும் அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றேன். அப்போது தனித்துத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் எனக்கிருந்தது. அதனால் மிகவும் திறமையாகப் பணியாற்ற முடிந்தது. அந்தக் கப்பலில் என்னுடன் 16பேர் பணியாற்றினார்கள். கடற் சண்டையானது தரையில் செய்யும் சண்டைகளைவிட மிகவும் சிரமமானதாக இருந்தது.

**ஜெகதா கப்பலில் பணி**

ஜெகதா என்பது சீனாவில் தயாரிக்கப்பட்ட கப்பல். அதில் இரண்டாவது கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்றினேன். அந்தக் கப்பலில் 33 மில்லி மீற்றர் பெரிய ஆயுதம் பொருத்தப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து பல கப்பல்களுக்கு மாறவேண்டியிருந்ததே தவிர தரையில் பணியாற்றுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

**முப்படைகளையும் வைத்திருந்த புலிகள்**

புலிகள் அமைப்பு சாதாரண பயங்கரவாத அமைப்பு அல்ல. அவர்களிடம் கடற்படை, தரைப் படை, வான்படை என அனைத்துப் படைகளும் இருந்ததால் அவற்றுக்கெல்லாம் முகம்கொடுக்க வேண்டியிருந்தது. நான் திருகோணமலையில் பணியாற்றிபோது அதிவேக டோறா தாக்குதல் கப்பல்களைப் பயன்படுத்தினோம். 443, 482, 466 ஆகிய டோறா படகுகள் இருந்தன. அந்தக் கப்பல்கள் ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்டவை. அவற்றில் பணியாற்றியபோது தினமும் கடற்புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு இரவுகளும் தூக்கமில்லாத இரவுகளாகவே கழிந்தன. அப்போது தாக்குதல் அணிகளுக்கெல்லாம் முன்னர் கடற்படைத் தளபதியாகவிருந்த அட்மிரல் ரவீஸ் ஜெரோமி லியந்துரு சின்னையா என்பவர் பொறுப்பாக இருந்தார். அப்போது புலிகள் பாவித்த சரக்குக் கப்பல் ஒன்றில் 3அல்லது 4 லொறிகளில் ஏற்றக்கூடிய பொருள்களை ஏற்றிவருவார்கள்.

**கடற்புலிகளின் பாதுகாப்புப் படகுகள்**

புலிகளின் பெரிய சரக்குக் கப்பல் ஒன்றை நாங்கள் அணுகுவதற்கு முன்னர் அந்தக் கப்பலுக்குப் பாதுகாப்புக் கொடுத்து முன்னால் வந்துகொண்டிருக்கும் புலிகளின் சிறிய படகுகளின் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அவற்றை அழித்த பின்னரே பெரிய கப்பலைத் தாக்க முடியும். கப்பல்கள் வருவதைக் கண்டறிவது ஆரம்ப காலத்தில் மிகச் சிக்கலானதாக இருந்தது.

(மிகுதி அடுத்த வாரம்)

---

# மிலாந்தி

**இந்த வாரச் சொல்**

மிலாந்தி, மிலாந்து, மிலாந்துதல் என்கிற சொல் யாழ்ப்பாணத் தமிழில் ஒரு வினைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கவனக் குறைவாக நடந்து கொள்வது, பராக்குப் பார்ப்பது, சென்ற அலுவலை மறந்து வேறு அலுவல் பார்ப்பது, மந்தகதியில் சிந்தனையை வைத்திருப்பது ஆகிய அர்த்தங்களில் இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

"அவனைக் கடைக்கு அனுப்பாதே அவன் எங்காவது மிலாந்திக்கொண்டு நிப்பான்"

"அவன் எங்கயோ மிலாந்திக் கொண்டு நின்றபோது பிடிச்சுப் போட்டாங்கள்"

"அந்த மிலாந்தல் குணம் அவங்கட குடும்பத்துக்கே இருக்கு"

"உப்பிடி மிலாந்திக் கொண்டு நின்றால் உவன் எங்க படிக்கப்போறான்"

"அங்க போய் மிலாந்திக் கொண்டு நிக்காமல் கெதியாச் சாமான்களை வாங்கிக் கொண்டு ஓடி வந்திட வேணும்"

"அவன் ஒரு ஏமிலாந்தி அவனை நம்பிப் பிள்ளைகளை அனுப்ப வேண்டாம்"

"அவள் சங்கிலியைப் போட்டுக் கொண்டு எங்கயோ மிலாந்திக் கொண்டு நிண்டதால யாரோ சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடீற்றாங்கள்"

"அதுகள் எங்கயோ மிலாந்திக் கொண்டு நிண்டதால கூட்டத்துக்குள் சிக்கி விட்டுதுகள்"

"கையில வெடியைக் கொளுத்தி வைச்சுக்கொண்டு எங்கயோ மிலாந்திக்கொண்டு நிண்டதாலைதான் அவன் காயப்பட்டவன்"


"ரீச்சர் படிப்பிக்கேக்க எங்கையவாது மிலாந்திக் கொண்டு நிண்டதாலைதான் குறைவான புள்ளி வந்திருக்குது"

"மோட்டார் சைக்கிள் ஓடும்போது மிலாந்திக்கொண்டு ஓடுற குணம் இஞ்சை பலருக்கிருக்கு"

ஜேம்ஸ் ரி.இரத்தினம்


# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)




09

இவ்வாறு கட்டுரையாசிரியரின் நோக்கில் தம்பி முதலியின் இயல்பு நிர்மாணிக்கப்படுவதில் தாக்கம் செலுத்திய அற்புத குணாதிசயங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. புதிதாக இடம்பெயர்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்றின் சிறுவனுக்கு, சுதேசிய குழந்தைகளின் மானசீக மட்டம் இல்லாமல் போவது, அத்துடன் அக்குழந்தை களின் எதிர்பார்ப்புகள் அதனோடிணைந்த எதிர்கால எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் போவது இயல்பானதே. ஆனால், இங்கே அவ்வேறுபாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள் ளும் சரிதை எழுத்தாளர், சுதேசி களின் குணாதிசயங்களை கீழானதாகக் காட்டி கேடுகெட்ட முறையில் தம்பி முதலியின் குணாதிசயங்களோடு ஒப்பிடுகிறார். சுதேசி என்ற சொல்லை அதன் சரியான பொருளில் அல்லது அதன்மேல் தாக்குதல் தொடுப் பதற்காகப் பயன்படுத்தும் எழுத்தாளர் சுதேசிகளுக்கு உரிய குறைபாடில்லாத உயர் குணாதிசயங்களை உடைய திறைமைசாலியாகத் தம்பி முதலியைக் காட்டி அவரைப் புகழந்து பாதுகாக்கின்றார். அதேநேரம் சுதேசிகளை இகழ்கிறார். இறுதியில் தம்பி முதலியின் பிற் கால வரலாற்றின் அடிப்படையில் வெற்றிகரமான சரிதை ஒன்றை அவர் நமக்குச் சோடித்துக் காட்டுகிறார். தம்பி முதலியின் பிற்கால வரலாற்றை வெறொரு சந்தர்ப்பத் தில் விளக்கமாகப் பார்ப்போம். ஆனால், ஒரு விட யத்தை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். தம்பி முத லிக்கு இணையான சபல புத்தி நீசத்தனம், வஞ்சகம் போன்ற குணாதிசயங்கள் சுதேசிகளுக்கு இல்லாதிருந்தது குறித்து நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். பதினான்கு அல்லது பதினைந்து வயதளவில் அவர் (தம்பி முதலி) கேர்ணல் ட்ரீபர்கின் கவனத்துக்கு உள்ளாகினார் என்று சரிதை எழுத்தாளர் கூறுகிறார். டச்சு ஆட்சியின்போது கொழும்பு கோட்டைப் பாது காப்புச் சேவையின் பிரதான கட்டளை அதிகாரியாக இருந்தவர் இவர். இளம் ஜெயவர்த்தனவுக்குள் எதிர் கால எதிர்பார்ப்பை



**கதிரேசன் காத்தவராயன்**

# பூதம் கிளம்பிவிட்டுதெண்டுறது இதுதானோ?

அண்டைக்கு மாஸ்ரர் வீட்டடிக்குப் போவமெண்டு போக றோட்டிலை சம்பரைக் கண்டு அவரையும் இழுத்துக்கொண்டு போனன். அங்கை சுதனின்ரை வழமையான கூட்டாளியள் ரண்டு பேரும் சுதனுமாய் கதைச்சுக் கொண்டிருந்தவங்கள் எங்களைக் கண்டிட்டு 'வாங்கோ வாங்கோ' எண்டு வரவேற்றாங்கள். இருந்து கொண்டம்.

அதிலை இருந்த ஒரு பெடியன் 'பிள்ளைபிடிகாறர் கவனம் உங்களையும் பிடிச்சுப் போடுவங்கள்' எண்டான். 'தம்பியவை நாங்கள் உப்பிடி எத்தினை பிடிகாறரைக் கண்டிட்டம்... பிடிச்சால் பிடிக்கட்டன்' எண்டன் சிரிச்சாங்கள். 'எங்களைக் கொண்டு போற வங்கள் சலரோகக்குளிசை, பிறசர்குளிசையெண்டு வாங்க முடியா மல் விட்டிடுவங்கள் கண்டியளோ? உங்களுக்குத்தான் பயம்.. இளந்தாரியள்' எண்டு சம்பர் பகிடிபண்ண அதக்கும் சிரிச்சாங்கள்.

மாஸ்ரர் வீட்டுக்கையிருந்து வந்து ஒரு சிரிப்போடை வந்தி ருந்துகொண்டார். 'என்ன மாஸ்ரர் உந்தச் சிரிப்புக்குள்ள கனக்கக் கிடக்குதுபோலை....' எண்டதுக்கு மாஸ்ரர் 'இல்லை...உந்தப் பிள்ளை பிடிக்கிற விசயமிருக்கல்லோ... காலம் எவ்வளவுதான் மாறினாலும் உது மாறயில்லை...அதுதான் சிரிப்பு வருகுது' எண் டார். 'உண்மைதான் மாஸ்ரர் அந்தக்காலத்திலை நாங்கள் ஒளிச்சு வீட்டுக்கை இருந்தம்... பேந்து பிள்ளையளும் இருந்துதுகள்.. இப்ப பேரப்பிள்ளையள்.. ஆச்சரியமல்லோ?' எண்டார் சம்பர்.

'கிறீஸ்பூதம்...ஒரு காலம்...' எண்டு ஒருத்தன் தொடங்க 'குண் டுசி மனிசன் எண்டும் ஒண்டு நாங்கள் பள்ளிக்குடத்திலை படிக் கிற காலத்திலை வந்ததல்லே?' எண்டான் சுதன். 'அது உங்கடை காலமப்பு... எங்கடை காலத்திலை சூனியக்காறியெண்டும் அவள் பிள்ளையளைப்பிடிச்சு பலி குடுப்பாவெண்டும் கண்ணுகளைத் தோண்டித் தின்னுவாவெண்டும் பயந்து றோட்டிலை கிழவியளைக் கண்டால் கத்திக்கொண்டு ஓடினனாங்களல்லே? கதிரேசர் ஞாபக

ஏற்படுத்தக்கூடிய திறமைகள் இயல் பாகவே அமைந்திருப்பதை உணர்ந்துகொண்ட கேர் ணல் தனது வீட்டில் எடுபிடி வேலைகள் செய்து வந்த இந்தப் பையனை டச்சு இராணுவ அலுவ லகத்தில் ஆராச்சி பதவிக்கு நியமித்து உதவி னார். ஒவ்வொரு எஜமானரும் எதிர்கால எதிர் பார்ப்பை வைக்கக்கூடிய திறமையுடைய சில ரின் பிறப்பிலேயே வரும் இயல்புகளைக் கண்ட றிந்து அவர்களைத் தரத்தில் உயர்த்தி கைகொடுப் பதாக எழுத்தாளர் இதன்மூலம் கருதுகின்றாரா?

கேர்ணல் டைட்டரிச் கால்வொன் ட்ரீPபர்க் இலங்கைக்கு வருகைதந்த முதல் பிரிகேடியர் ஆவார். ஜெர்மனியில் ஹனோவர் அல்லது அதற் குக் கிட்டிய பிரதேசத்திலிருந்து 18ஆம் நூற் றாண்டில் வந்தவர் அவர். ஜெயவர்த்தன குடும் பத்தினர் இந்தப் பறங்கியருக்கு நன்றியுடைய வர்களாக இருக்க வேண்டும் என்பது மாத்திர மல்ல, என்றென்றும் கடன் பட்டவர்களாக இருக்க வேண்டும். தமது இனத்தவரால் ஆற் றப்பட்ட இந்தப் பெரும் புண்ணிய கருமத்தை எண்ணி ஏனைய பறங்கியர்கள் பெரும் பெருமை கொள் வார்கள் என்பதிலும் சந்தேகம் ஏதுமில்லை.

எந்தத் தரத்திலிருந்தும் தனது ஊழியர்களின் உண்மையான சேவையைக் கௌரவிப்பது ஓர் உத்தம குணம் ஆகும். வீட்டு வேலையாளாக இருந்தாலும் அந்த உயர் வழக்கத்திலிருந்து விலக்கி வைப்பது ஆகாதென்பது உண்மைமயே. எனினும் பரம்பரையின் பிரதானமாகக் கருதப் படும் தம்பி முதலியின் ஆரம்பம் ட்ரீபர்க்கின் வீட்டுடு வேலைக்காரன் என்ற பதவியுடன் தொடர் புபடுமானால் ஜூனியஸ் ரிச்சார்ட் ஜெயவர்தன வின் "ஹாமு" பட்டத்துக்கு அது எந்த விதத்தி லும் பொருத்தமானதல்ல.

டச்சு இராணுவத்தில் ஆராச்சி பதவிக்குச் சேர்ந்த தம்பி முதலி பின்னாட்களில் டச்சு இரா ணுவத்திடம் வேதனம் பெறும் ஒற்றர் சேவையில் இணைந்தார். மேஜர் ஜெனரல் ஸ்டூவர்டின் தலைமையில் இலங்கை வருகை தந்த ஆக்கிர மிப்பாளர்களான பிரித்தானிய இராணுவம் கொழும்பு கோட்டையை நோக்கிப் பயணப்பட்ட பிறகு, அவ் இராணுவத்தின் வலிமை, முன்னே றிவரும் இராணுவத்தின் பயணப் பாதை விவ ரம் ஆகியவற்றைக் கண்டறிந்து தகவல் தெரி விக்க, பிரித்தானிய இராணுவத்துக்குள் ஊடுருவ வேண்டிய மாறுவேட ஒற்றனாவதற்குத் தகுதி உடையவராக டச்சு ஆளுநர் வொன் எங்கல் வைத் தேர்ந்தெடுத்தது ஆராச்சி ஜெயவர்தன வையே ஆகும். விரும்பத்தகாத இந்தப் பணி யைத் தம்பி முதலி மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார் என்று தெரிய வருகிறது.

டச்சுக்காரர்கள் நாட்டை விட்டு விரட்டப்பட்ட பிறகு அவர்களிடம் பணிபுரிந்த முதலிமார்களின் பதவிகள் முன்னிருந்தவாறே பிரித்தானியர்களால் வழங்கப்பட்டன. இருசாரருக்கும் ஒரே விதமா கப் பணியாற்றியவர் தம்பி முதலி ஆவார். களனி ஆற்றின் அக்கரையில் மாபோலையிலி ருந்து டச்சு ஒற்றுச் சேவையை முற்றாக ஒழித் தவர் அவரே. (தொடரும்)

மிருக்கோ?' எண்டு கேட்டார் மாஸ்ரர். 'ஓமோம் மாஸ்ரர் நல்லாய் ஞாபகமிருக்கு எங்கடை தூரத்துச் சொந்தமான கிழவி யொண்டு வீட்டை வர நானும் அக்காவும் தம்பியையும் இழுத்துக்கொண்டு வேலிப் பொட்டுக்காலை குஞ்சியம்மான் வீட்டுக்கை ஓடி ஒளிச்சது... நல்லல ஞாபகம்' எண்டு நான் சொல்ல எல்லாரம் சிரிச்சினம்.

'இப்ப கிறீஸ்பூதம்... பிள்ளைபிடிகாறர் அதுக்கு இப்ப சிறுவர் கடத்தல்காறர் எண்டல்லே பேர்... இதுகளுக்குள்ளை அரசியல் இரக்கா மல்லே?' எண்டான் ஒராள். 'எண்டுதான் கதையொண்டு காதிலை விழுந்துது...அது கிறீஸ் மனிசனிலை வடிவாய் வெளிப்பட்ட தல்லே?' எண்டு சுதனும் ஆமோதிச்சான். 'இதுக்கை எங்கடை இணையப்பொடியளின்ரை பங்குகளும் இருக்குப்போலை?' எண்டான் மற்றாள்.

'உண்மைதான்... இணையங்களிலை பாக்கேல்லையே கிறாபிக்ஸ் விளையாட்டு களை.. தலையில்லாமல் உலவுறது..இடுப் புக்குக்கீழை இல்லாமல் உலவுறது... அது இதுவெண்டு...' எண்டு சுதன் சொல்லிக்கொண் டிருக்க மற்றவன் 'ஏன் இணையங்களிலை செய்தியளைப் பாருங்கோவன்... வீட்டுக்குள் பயங்கரம் குடும்பம் பட்ட அவலம் எண்டு தலையங்கம் இருக்கெண்டு உள்ளுக்கை போனால் சோத்துப்பானையை பூனை விழுத் திப்போட்டுது ஆனால் சோறு பானைக்குள்ளை இருக்கேல்லை பிறிஜ்சுக்கை இருந்தது எண்டு முடிஞ்சுது...' எண்டு எரிச்சலோடை ஒருத்தன் சொன்னான்.

'உப்பிடி உப்புப் புளியில்லாத பரபரப்புகள் தான் ஏராளம் செய்திக்குள்ளை பரபரப்பு எண் டது இப்ப பரபரப்புக்கை கொஞ்சச் செய்தி யெண்டல்லே நிலைமை இருக்குது' எண்டான் சுதன். 'இன்று வெளியான அதிரடி உத்தரவு எண்டு தொடங்கி எப்பவோ நடந்த ஒரு செய் தியைப் போட்டிருப்பங்கள்.. நான் அடிக்கடி ஏமாறுகிறனான்' எண்டான் மற்றவன்.

'இந்தப் பிள்ளைபிடிப்புக் கதையளும் உப்பிடித்தான் போலை என்ன?' எண்டு கேட்டார் சம்பர். 'தேப்பன் பிள்ளையை சினே கிதன் மூலமாய் கூப்பிட்டகதை வந்ததல்லே? அதைமாதிரி மூளைசுகமில்லாதனை அடிச்ச தும்நடந்திருக்கு' எண்டு மாஸ்ரர் சொல்லிக் கொண்டிருக்க கையிலை சாக்கொடை வல் லியம்மான் வந்தார். 'உந்தா சாக்கோடை பிள்ளைபிடிகாறன்' எண்டு நான் சொல்ல எல் லாரும் சிரிச்சினம். வல்லியம்மான் இன்னும் பிலத்தாச் சிரிச்சார்

'நான் உதிலை வரேக்குள்ளை தாயொடை பிள்ளையொண்டு குளறிக்கொண்டு போகுது... கோதாரி உதே சங்கதி?' எண்டார். 'எப்பிடியோ முள்ளிவாய்க்கால், விகாரைகட்டிறது, காணி பிடிக்கிறதை மறந்துகதைக்கிறதுக்கு ஒண்டு கிடைச்சிருக்கல்லே...அது காணும்..கதைக்க ஒண்டுமில்லாமல் கஸ்ரப்படத் தேவையில்லை யெண்டதிலை சந்தோசமல்லோ?' எண்டு கொண்டு எழும்பி வந்திட்டன்.

# 11

# மீட்டல்...




துஷ்யானந்த சுவாமி

உள்ளெடுக்கின்ற ஒவ்வொன்றினதும் சமிபாடு என்பது முக்கியமானது. அது பற்றியும் பேச நிறையவே உள்ளது. சாப்பாடு சமிபாடடைய ஊக்கப்படுத்த இயற்கையாக ஒன்றுமே இல்லையா? எம்முன்னோர் அதற்காகவே பல துணை உண வுகளை வைத்திருந்தனரே? ஆதில் முக்கியமானது இரசம். ஆதனைவிட உணவினது சுவையை, மணத்தை என மெரு கூட்டுவதற்காக எத்தனை பொருட்களைப் பயன்படுத்தினார்கள்?

சாப்பாடு இயற்கையானதாக இருந்தது. மரக்கறி வகைகளா கட்டும் மாமிசம் மற்றும் கடலுணவுகளாகட்டும் அவை அனைத் துமே இயற்கையாக அல்லது இயற்கையுணவுகள் மூலமாக வளர்க்கப்பட்டதாக நம்பகமானதாகவும் ஆரோக்கியமானதாக வும் இருந்தன. சுவையூட்டல், நிறமூட்டல், மணமூட்டல் என யாவும் இயற்கையான பொருட்களாலேயே மேற்கொள்ளப் பட்டன. அதனால் உணவினது தரத்துடன் சேர்ந்துபோசாக்கும் அதிகரித்திருந்தது.

சேர்க்கப்பட்டவை உணவினது சமிபாட்டை ஊக்கப்படுத்தின. சிக்கலான நார்ச்சத்துள்ள உணவுகள் கூட மிக இலகுவான சமி பாட்டிற்குட்பட்டு உடலில் சேர்ந்தன. நல்ல பயன்களை வழங் கின. இன்று? அனைத்துமே செயற்கையானவைதான் என அடித்துக் கூறுமளவில்தான் உணவுப் பொருட்கள் மலிந்துள்ளன. மலிந்துள்ளன என்பது பண அளவீடல்ல. பல்கிப் பெருகியுள்ளன என்பதே. ஏந்தவொரு உணவுப்பண்டத்தை எடுத்துக்காட்டுக்காக எடுத்தாலும் அதனது மூலப்பொருள் தொடக்கம் அது உண் ணப்படும் வரையாக அத்தனை நடைமுறைகளும் அனேகமாக செயற்கையானதாகவே இருக்கிற ஒரு சூழலுட்தான் இருக்கி றோம்.




# " /gu;`hdh"

**படம் எப்படியிருக்கு...?**

'ஒருநாள் கூத்து', 'மான்ஸ்டர்' ஆகிய படங்களை இயக்கிய நெல்சன் வெங்கடேசனின் படம் இது. அதனால் இந்தப் படம் குறித்த எதிர்பார்ப்பு எகிறியிருந்தது. அதுமாத்திரமல்லாமல் அண்மையில் வெளியாகிய "கேரளா ஸ்ரோறி" மீது எழுந்த விமர்சனங்கள் இந்தப் படம் குறித்த எதிர்பார்ப்பையும் தூண்டுதல்களையும் ஏற்படுத்தியிருந்தன. அந்த வகையில் இந்தப் படம் பலரது கவனத்தை ஈர்த்திருந்தது - எதிர்பார்ப்புகளையும் உருவாக்கியிருந்தது.

**கதை**

இந்தியாவின் சென்னைப் பகுதியில் வசிக்கும் நடுத்தர முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஃபர்ஹானா (ஐஸ்வர்யா ராஜேஷ்). அவளது கணவர் கரீம் (ஜித்தன் ரமேஷ்) பாதணிகள் விற்கும் கடை ஒன்றை நடத்தி வருகிறார். அந்தக் கடையில் வருமானம் குறைவாக இருப்பதால் தானும் வேலைக்குச் செல்ல முடிவெடுக்கிறாள் ஃபர்ஹானா. அதன்படி தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் வேலைக்குச் சேர்கிறாள். ஃபர்ஹானாவின் குடும்பப் பொருளாதாரம் முன்னேற்றம் காண்கிறது. இதனிடையே தனது குழந்தைக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை ஒன்றைச்செய்ய வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகிறாள். அதற்கு அதிக பணம் தேவைப்படுவதால், வேலை செய்யும் நிலையத்தில் 3 மடங்கு அதிக வருமானத்தைக் கொடுக்கும் மற்றொரு பிரிவில் பணியாற்றுவதற்குச் சம்மதிக்கிறாள். அந்த வேலை ஃபர்ஹானாவின் வாழ்க்கையை எப்படியெல்லாம் புரட்டிப்போடுகிறது என்பது தான் படத்தின் மீதிக்கதை.



முகமறியாதவர்களுடனான இணையவெளித் தொடர்பு உரையாடல்களில் இருக்கும் ஆபத்துகளைப் பேசுகிறது படம். இஸ்லாமியர்கள் கணிசமாக வாழும் சென்னை ஐஸ்ஹவுஸின்

வீட்டுச் சமையல் என்பது குறைந்துவருகிற சூழலில் முன்பதிவு உணவுகள், விற்பனைக்கான உணவுகள் என பெருகி வருகின்ற நிலைமையே காணப்படுகிறது. இவ்வகையான உணவுப் பொருட்களை தயாரிக்கிறபோது நேரம், பொருளாதாரம் அதாவது அதிக இலாபம் என்பவற்றிற்காக வழங்கப்படுகிற முக்கியத்துவம் குறித்த உணவிற்கான போசணைப் பெறுமானங்குறித்து வழங்கப்படுவதில்லை என்பதுகண்கூடானது.

இங்கேதான் எமது அந்தஸ்து என்கிற வரட்டுக் கௌரவம் தலையெடுத்து ஆடுகிறதை அவதானிக்கலாம். அவர்கள் இந்த உணவகத்தில்தான் உணவு வாங்குகிறார்கள்... அங்கே மலிவு...இங்கே சுவை அதிகம்... என்கிறவிதமாகத் தொடங்குகிறவை குறித்த உணவகத்தினது நுகர்வுவழி விளம்பரமாக அமைகிறது. அதற்கு மேலதிகமாக உணவு விளம்பரங்களும் குறித்த உணவகமே வடிவமைத்துக்கொள்ளும் பிரத்தியேகமான விளம்பரங்களும் கண்மூடித்தனமான நுகர்வை ஊக்குவிக்கின்றன.

பின்பற்றுவது ஒரு நடைமுறையாகிவிட்ட இன்றைய வாழ்வியலில் பின்பற்றக்கூடியவர்கள் என்கிற முத்திரையுடன் உலவுகிற பிரபலங்களது வாழ்க்கை முறையைத் தவறாக அல்லது புரிதலற்றுப் பின்பற்றுவதும் ஒருவிதமான நாகரீகமாகியுள்ளது. இவை எமது ஆரோக்கியம் மற்றும் உடலுக்கான தேவைகள் போன்ற மிகமுக்கிய விடயங்களைப் பற்றிய உயர் கவனிப்பைத் தடுத்துவிடுகின்றன. உடலை முழுமைப்படுத்துதல் என்பதுமறக்கப்பட்டு வயிற்றை இட்டு நிரப்புதல் அதுவும் நாகரீகமாக பணச்செலவுடன் என்கிற இடத்தில் நிற்கிறோம்.

உணவு என்பது குறித்த ஒரு சமூக அடையாளமாகவும் இருந்தது. குறித்த சமூக பழக்க வழக்கங்கள், அச்சமூகத்திற்கான உடற் தேவைகள், பொருளாதாரம், மூலப்பொருட்களது பெறுகை மற்றும் அறிவு விருத்தி போன்ற காரணிகள் அவர்களது உணவையும் அதனது தரத்தையும் பெரிதும் தீர்மானித்துக்கொண்டன. இன்று அனேகமாக மேலைத்தேய கலாச்சாரப் பிணைவாகவே (உடைகள் போன்று) உணவுகளும் உண்ணும் முறைகளும் மாறிவிட்டன.

சுவை, மணம், விலை என நாம் கொடுக்கிற முக்கியத்துவத்தை அதன் போசணை விடயத்தில் கவனமெடுக்க முடியாதவர்களாக மாறிவிட்டோம் அல்லது மாற்றப்பட்டு விட்டோம். கலாச்சார அழிப்பிறகான ஒரு கருவி என்கிற அளவில் உணவும் உள்ளது. பாரம்பரியமான உணவுகள் எனும்போது அவை எமது சூழலுடன் மிகவும் ஒத்திசைவானவையாகவே இருந்தன. பாரம்பரிய உணவுகளைத் தவறவிட்டு வருகிறோம்.

பாரம்பரிய உணவுகளது பெறுமானங்கள் என்ன? அவற்றினது முக்கியத்துவங்கள் என்ன? அவற்றினது சிறப்பியல்புகள் என்ன? எப்போதாவது சிந்தித்துள்ளோமா? சிந்திப்பதற்கும் பேசுவதற்கும் ஏராளம் உள்ளன. ஆற அமர்ந்து பேசுவோம்.

**முந்தைய தலைமுறைக்கும் தற்போதைய தலைமுறைக்குமான வித்தியாசத்தை ஐஸ் வர்யா ராஜேஷின் அப்பா மற்றும் கணவர் மூலம் காட்சிப்படுத்தி யிருந்ததும், தன் மனைவி மீது பழி வந்த பின்பும் அதனை குர்ஆன், ஹதீஸின் வழியே எதிர்கொள்ளும் கணவர் கதாபாத்திரமும் பாராட்டுக்குரியது**



நெருக்கடியான வீடுகளுக்குள் பிரவேசிக்கும் முஸ்லிம் பெண் ஒருவரின் அன்றாட வாழ்க்கையின் சுழலோட்டத்தையும், அவரைச் சுற்றி வரையப்பட்டிருக்கும் கோடுகளின் எல்லைகளையும் படம் பதிவு செய்கிறது. அந்தப் பெண்ணின் அக-மன வெளிச்சிக்கல்களை நோக்கிப் படம் நகரும்போது காட்சிகள் உயிர்கொள்கின்றன.

குறிப்பாக ஒரு பெண்ணுக்கான 'பொருளாதாரா விடுதலை'யின் தேவையை உரைத்துக்கொண்டேயிருக்கும் படம் ஓரிடத்தில் வீதியோர பெண்மணியின் குரலின் வழியே அதன் அழுத்தத்தை கூட்டுவது ரசிக்க வைக்கிறது. செல்வராகவனுடனான ஐஸ்வர்யா ராஜேஷின் உரையாடலை கவிதைகளாக்கி ரசிக்க வைத்திருப்பது எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன், சங்கர் தாஸ், நெல்சன் தீலிப் குமாரின் வசன உத்தி.

**பாத்திரங்கள்**

அழுவது, எழுவது, பிரச்சினையை எதிர்கொள்ளப் போராடுவது, தனியொரு பெண்ணாகக் குடும்பப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பது என ஐஸ் வர்யா ராஜேஷை மறக்கடித்து 'ஃபர்ஹானா' மட்டுமே திரையை ஆக்கிரமித்திருப் பதால் கதையுடன் எளிதில் ஒன்ற முடிகிறது. தொப்பியும், தாடியுமாக அதிகம் பேசாமல் மௌனத் தாலேயே உணர்வைக்கடத்தும் புரிதல் கொண்ட கணவராக 'ஜித்தன்' ரமேஷ் நடிப்பில் அத்தனை யதார்த்தம். 'சர்ப்ரைஸ்' கொடுக்கும் செல்வராகவன் தன் குரல் வழியே ஆதிக்கம் செலுத்துவதுடன், அந்த கதாபாத்திரத்திற்குக் கச்சிதமாகப் பொருந்திப்போவது பலம். அனுமோல், ஐஸ்வர்யா தத்தா உள்ளிட்டோர் தேவையான நடிப்பை வெளிப்படுத்த தவறவில்லை.

**பலம் - பலவீனம்**

யதார்த்த மீறல்களும் முரண்பாடான கதாபாத்திரங்களும் படத்தின் மிகப் பெரிய பிரச்சினை. தன் மனைவியை வேலைக்கு அனுப்பும் அளவிற்கான புரிதல் கொண்ட ஜித்தன் ரமேஷ் கதாபாத்திரம் மனைவியை வீட்டுத் தொலைபேசியைத் தொட அனுமதிக்காமலிருப்பதும், ஐந்துவேளை தொழுகையுடன் தஹஜ்ஜத் தொழும் அளவிற்கான இறைபக்தி கொண்ட ஃபர் ஹானா கதாபாத்திரம் பணத்திற்காக தேர்ந்தெடுக்கும் தொழிலும், அந்தத் தொழிலில் ஆபத்துகளை அறிந்தும் அதில் தொடர்வதும் முரண். ஸ்மார்ட்போன் யுகத்திலும் ஃபர்ஹானா மொபைல் பயன்படுத்தாமல் இருப்பது குறித்துப் புரியவில்லை. பள்ளியில் கூட முஸ்லிம் குழந்தை ஹிஜாப் அணிந்திருப்பது, உருது பாதி தமிழ் பாதி எனக் கலந்து பேசும் 'அரிய' இஸ்லாமியர் வீடு, இஸ்லாமியர் என்றாலே அவர் தலையில் நிச்சயம் தொப்பியும் ஜிப்பாவும் அணிருந்திப் பார்கள் போன்ற யதார்த்ததுக்கு மிகையான காட்சிகள் நெருடல்.

முந்தைய தலைமுறைக்கும் தற்போதைய தலைமுறைக்குமான வித்தியாசத்தை ஐஸ் வர்யா ராஜேஷின் அப்பா மற்றும் கணவர் மூலம் காட்சிப்படுத்தியிருந்ததும், தன் மனைவி மீது பழி வந்த பின்பும் அதனை குர்ஆன், ஹதீஸின் வழியே எதிர்கொள்ளும் கணவர் கதாபாத்திரமும் பாராட்டுக்குரியது. சர்ச்சையான கொலைக்குப் பின்பும் தொலைத் தொடர்பு நிலையம் மீண்டும் இயங்குவதும், ஜித்தன் ரமேஷ் குடும்ப பொருளாதார சூழலை எதிர்கொள்ள எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாததும், செல்வராகவன் கதாபாத்திரத்தின் பின்னணியில் தெளிவின்மை, தனியாளாக அவர் எப்படி எல்லாவற்றையும் கண்டறிகிறார் உள்ளிட்ட சிக்கல்களும் இல்லாமலில்லை. தவிர, ஒரு கட்டத்தில்

படம் அடுத்தடுத்து நகராமல் ஒரே இடத்தில் சுற்றிக்கொண்டிருப்பது அயற்சி.

**இசை, படத்தொகுப்பு**

ஜஸ்டின் பிரபாகரன் பின்னணி இசை, காட்சிகளுக்குத் தேவையான பங்களிப்பில் கச்சிதம் சேர்க்கிறது. நெருக்க டியான வீடுகள், குறுகலான சந்து, பெரிய பள்ளிவாசல் எனத் திருவல்லிக்கேணியைக் குறுக்கு வெட்டுத்தோற் றத்துடன் கோகுல் பினோயின் கமரா பதிவு செய்திருக் கும் விதம் ஈர்ப்பு. சராசரியான கதைதான் என்றாலும் தனது கெட் டித்தனம் மூலம் காட்சிகளை நேர்த் தியாக்கியிருக்கிறார் சாபு ஜோசஃப். எல்லாவற்றிற்கும் மேலாக இஸ்லாமி யக் குடும்ப பின்னணியிலிருந்து இந்த கதையை அணுகியிருப்ப தற்கான தேவையையும், அதற்குரிய நியாயத்தையும் படத்தின் காட்சி களோ, திரைக்கதையோ சேர்க்கா மலிருக்கும் சூழலில் 'ஃபர்ஹானா' வாக இந்தப்படம் உருவானது ஏன் என்ற கேள்வி எழவே செய்கிறது.

# கிழக்குத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்...!

சாதனா

வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந் தித்து வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள், முக்கிய அபிவிருத்திப் பணிகள், இனப்பிரச்சினைக் கான தீர்வு ஆகிய விடயங்கள் பற்றி அரசதலைவர் ரணில்விக்கிரமசிங்கவுடன் பேசும் கூட்டங்கள் இரண் டுக்கு ஏற்பாடாகியிருந்தது. இந்த மாதம் 11, 12ஆம் திகதி களில் அவற்றுக்குக் காலம் குறிக்கப்பட்டது. எனினும்




11ஆம் திகதி மாத்திரமே பேச்சுகள் நடந்தன. மறுநாள் பேச்சுகள் ஒத்திவைக்கப்பட்டன. இந்தக் கூட்டங்களுக்கு எதிராகப் பலர் கிளர்ந்தெழுந்து கருத்து வெளியிட்டனர். கிழக்குத் தலைவர்களையும் இந்தப் பேச்சு மேசைக்கு அழைக்கவேண்டும். வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகப் பூமி என்பதால் கிழக்கைப் புறக்கணிக்க முடியாது என்று பலர் கருத்துக் கூறினார்கள்.

**கிழக்கு மாகாணத்துக்குத் தனியான தேர்தல்கள்**

புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிழக்கு மாகாணம் 2006ஆம் ஆண்டில் இலங்கைப் படையினர் வசமாகி யது. 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்துக்கு மாத்தி ரம் தேர்தல் நடந்தது. புலிகள் அமைப்பிலிருந்து விலகிய சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) முதலமைச் சரானார். வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம், இரண்டும் இணைந்ததுதான் தமிழீழம் என்கிற புலிகளின் கோட் பாட்டை வாக்களித்த மக்களும், போட்டியில் குதித்த தலை வர்களும் உதறித்தள்ளினர். அதுகுறித்து ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கி இந்தியாவும் அதை எதிர்க்கவில்லை.

2009இல் வடக்குப் பகுதி முழுதும் படையினரின் கட் டுப்பாட்டுக்கள் கொண்டுவரப்பட்ட பின்னர் 2012இல் கிழக்கு மாகாணத்துக்கு இரண்டாவது தேர்தல் நடத்தப் பட்டது. கிழக்குக்கு மாத்திரம் தனியாகத் தேர்தல் நடத் தக்கூடாது என்று தற்போது கிழக்குத் தலைவர்களையும் கூட்டத்துக்கு அழைக்க வேண்டும் என வற்புறுத்துபவர்கள் மகிந்த அரசை அப்போது வற்புறுத்தியிருக்கவில்லை. அதற்காக வடக்குக் கிழக்கில் நிர்வாக முடக்கலை மேற் கொள்ளவில்லை. இரண்டாவது தேர்தலும் ஏகமனதாக நடந்தது. இப்படியாகக் கிழக்கு மக்கள் கிழக்கு மாகாண சபைக்கு இரு தடவைகள் தமது ஜனநாயக அங்கீகாரத்தை வழங்கிவிட்டார்கள்.

**வடக்கு மாகாணசபைத் தேர்தல்**

2013இல் வடக்கு மாகாணசபைக்குத் தனியாகத் தேர் தல் நடத்தப்பட்டது. கிழக்குத் தலைவர்களைப் போலவே வடக்குத் தலைவர்களும் அதற்காகத் தவியாய்த் தவித் தார்கள். நீதியரசரான விக்னேஸ்வரன் முத லமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கினார். தவிர வடக்கு மாகாணத் துக்குத் தனியான தேர்தல் அவசியமில்லை என்று அவர்

கூறவில்லை. நேரடியாக இந்தியப் பின்னணியில் இயங்குபவராக இருந்தபோதிலும் வடக்குக்கு மாத்திரம் தனியான தேர்தலை வைக்க முடியாது என்று கூறவில்லை. 2013இல் வடக்கு மக்களும் தமது ஜனநாயக ஆதரவை வடக்கு மாகாணசபைக்கு வழங்கினர். இவ்வாறாக 2008 இலிருந்து இன்றுவரை வடக்கையும் கிழக்கையும் பிரித்து இலங்கை ஆட்சியாளர்கள் நிர்வாகம் நடத்தி வருகின்றனர். தமிழர் தாயகக் கோட்பாடும் இவ்வாறுதான் பிசுபிசுத்துப் போய்க்கொண்டிருக்கிறது.

**முஸ்லிம்களின் மனதில் அவர்கள் கிழக்கில் செறிந்து வாழும் சிந்தனையைத் தூவியவர் எம்.எச்.எம். அஷ்ரப். அது இன்றுவரை செயல்வடிவம் பெற்றுக் கிழக்கிஸ்தான் என்று சொல்லுமளவுக்குக் கிழக்கு முஸ்லிம்களின் பிடிக்குள் சென்றுகொண்டிருக்கிறது**


### கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு

முஸ்லிம்களின் மனதில் அவர்கள் கிழக்கில் செறிந்து வாழும் சிந்தனையைத் தூவியவர் எம்.எச்.எம். அஷ்ரப். அது இன்றுவரை செயல்வடிவம் பெற்றுக் கிழக்கிஸ்தான் என்று சொல்லுமளவுக்குக் கிழக்கு முஸ்லிம்களின் பிடிக்குள் சென்றுகொண்டிருக்கிறது. கல்முனைப் பிரதேச செயலர் பிரிவுப் பிரச்சினையை நல்லாட்சிக் காலத்தில்கூட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. கடந்த மாதம் 25ஆம் திகதி நடந்த வடக்குக் கிழக்குத் தழுவிய நிர்வாக முடக்கல் போராட்டத்தின்போதும் அம்பாறை முடக்க முஸ்லிம்கள் முன்வரவில்லை.

நிலமை இவ்வாறிருக்கையில் முஸ்லிம் அமைப்புக்களோ முஸ்லிம்களையும் இந்தப் பேச்சுகளில் இணைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது. இதைவிட முஸ்லிம்களையும் தனியாக அழைத்துப் பேச வேண்டும். எமக்குச் சவூதிஅரேபியாவின் பின்னணி உண்டு அதை வைத்தே முஸ்லிம்கள் தங்களை எதிர்காலத்தில் வளர்த்தெடுக்க முடியும் என்றெல்லாம் நாடாளுமன்றத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்கள் தமக்கானக் கொள்கை வகுப்பு அமைப்புகள் சிலவற்றை உருவாக்கி அதில் முஸ்லிம் சிந்தனையாளர்களை இணைத்துத் தகவல் சேகரிப்பு மையங்களையும் உருவாக்கியிருக்கிறார்கள். அவ்வாறான ஒரு கொள்கை வகுப்புகளோ, அமைப்புகளோ ஏன் ஒரு தலைமைச் செயலகமோ தரவு சேகரிப்பு மையமோ கூட மிகப் பழயை கட்சியான தமிழ் அரசுக் கட்சியினரிடம் இதுவரையில்லை. அதைவிடத் தமக்குள் ஒற்றுமையும் இல்லை.

இப்போது வடக்குத் தலைவர்களைச் சந்திக்கும் முன்னெடுப்புக்கூட தமிழ்த்தலைவர்களாலேயே குழப்பப்படுவது ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் வாய்ப்பாகவே அமையும். அதையும் மீறிக் கிழக்குத் தலைவர்களையும் சேர்க்க வேண்டும் என்பது நிச்சயப்பட்டால், அதன் அடுத்த கட்டமாக முஸ்லிம் உறுப்பினர்களையும் அழைத்துப் பேச வேண்டிய தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழும். இதனால் தமிழர்களின் பிரச்சினை திசை மாற்றப்படும்.



# ஏன்...?

நட்சத்திரா

# அஃப்டி...?

## வீட்டு வாசலில் நெற் கதிர்களைக் கட்டித் தொங்கவிடுவதேன்...?

51



எமது முன்னோர்களில் பலர் தமது வீட்டு வெளி வாசலுக்கு அருகில் நெற்கதிர்களைக் கட்டித் தொங்கவிடும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இப்போதும்கூட அந்தப் பழக்கம் எம்மில் பலருக்கு இருக்கிறது. பெரும்போக வேளான்மை விதைத்து அந்த அறுவடையின்போது முதலில் வெட்டுகின்ற நெற் கதிர்களைக் கொண்டு வந்து இவ்வாறு வீட்டு வசாலில் கட்டித் தொங்கவிடுவது வழக்கம். அதை ஏன் செய்கிறார்கள் என்பதில் பலருக்குத் தெளிவில்லை.

நெற் கதிரை வீட்டு வாசலில் தொங்கவிட்டால் அதிலுள்ள நெல் மணிகளை உண்பதற்காகச் சிட்டுக்குருவிகள் வீட்டுக்கு வந்து போகும். சிட்டுக்குருவிகளின் சத்தம் அந்த வீட்டில் நல்ல அதிர்வலைகளை ஏற்படுத்தும். அதனால் கெட்ட அதிர்வலைகள் அங்கிருந்து இல்லாதுபோகும். தமது வீட்டுக்குச் சிட்டுகு;குருவிகள் வந்து போக வேண்டும் என்பதற்காகவும் அவற்றின் கீச்சிடும் நல்ல சத்தம் தமது வீட்டுக்குள் பரவ வேண்டும் என்பதற்காகவுமே நெற் பயிர்களைத் வீட்டு வாசலில் கட்டித் தொங்க விட்டனர்.

இதைவிடத் தாங்கள் விவசாயச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறியீடாகக் காட்டுவதற்காகவும் சிலர் நெற் கதிர்களைக் கட்டித் தொங்க விடுகின்றனர். நெல் விவசயம் செய்பவர்கள் மாத்திரமல்லாமல் வேறு தொழில்களில் ஈடுபடுவோரும்கூடக் கட்டித் தொங்கவிடுகின்றனர். அதற்கு முக்கிய காரணம், குருவிகளின் சத்தத்தைத் தமது வீட்டுக்குள் ஏற்படுத்துவதற்காகவே. தற்போது பலர் தமது வீடுகளுக்கு வெளியில் ''லவ்பேர்ட்ஸ்'' ரகக் குருவிகளைக் கூடுகளில் அடைத்துத் தீனிபோட்டு வளர்க்கின்றனர். இதன் வருகைகூட இதனடிப்படையில் உருவானதே. இப்போது அது அழகியலாகவும், நாகரீகமாகவும் மாறிவிட்டாலும் குருவிகளின் கீச்சிடும் இசையை இரசிக்கவும், அந்த இனிமையை அனுபவிக்கவுமே இந்தச் சிறு குருவிகள் வளர்ப்பு ஆரம்பிக்கப்பட்டது. சிறிய சத்தத்தை எழுப்பும் இந்தக் குருவிகள் சிறியனவாகவும் இருந்தன. அதனால் அவை அழகு மற்றும் ஆடம்பரம் சார்ந்தும் பின்னர் அதிகம் பரவின. எது எப்படியிருப்பினும் இந்தச் சிறு குருவிகளை வீட்டுக்குள் கொண்டுவருவதற்கான உத்தி நெல் மணிகளைக் கட்டிக் குருவிகளை ஈர்த்த பழங்காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது என்றே கூறவேண்டும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781